DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 303/2023**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : காத்தவராயன் (எ) ராஜு | Caste | : | |
| Father Name | : ரவிச்சந்திரன் | Calling | : | |
| Village | : | Religion | : | |
| Taluk | : | Age | : | 19 years |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **10.04.2026.**

**PW - 8**

**(**எதிரி ஆஜர்**)**

**முதல் விசாரணை**

நான் கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் வசிக்கிறேன். தற்சமயம் ஓட்டுநர் வேலை செய்கிறேன். 2022–ம் வருடம் முசிறி அய்யம்பாளையத்தில் ஏ.பி.எஸ். செங்கல் சூளையில் வேலை செய்தேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.6 ரேவதி, அ.சா.7 கனிஷ்கா ஆகியோரை தெரியாது. வழக்கில் இறந்து போன பிரபுவை தெரியாது. 2022–ல் மேற்படி செங்கல் சூளையில் என்னுடன் வேறு யார் யார் வேலை செய்தார்கள் என்று தெரியாது. பிரபு எப்படி இறந்தார் என்று தெரியாது. சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர். முசிறி நீதிமன்றத்திற்கு அப்போது போனேன். அங்கு சென்று, அங்கிருந்த நீதிபதி என்னை கேட்டார். என்ன சொன்னேன் என்று மறந்துவிட்டது.

*(சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி, குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.)*

<u>**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

போலீசார் விசாரித்த போது, கடந்த 2022-ம் வருடம் நான் ஏ.பி.எஸ் செங்கல் சூளையில் வேலை செய்தேன் என்றும், என்னுடன் இறந்து போன பிரபுவும், அவரது மனைவியான எதிரி ரேகாவும் வேலை செய்தார்கள் என்றும், பள்ளி விடுமுறை நாட்களில் ரேகாவின் மகள்கள் ரேவதி, கனிஷ்கா அங்கு வந்து செல்வார்கள் என்றும், கடந்த 27.08.2022 அன்று இரவு 10.00 மணியளவில் பிரபுவை பார்க்க செங்கல் சூளைக்கு சென்றேன் என்றும், கொட்டகைக்கு வெளியே இருந்த ரேகாவிடம் பிரபுவைப் பற்றி கேட்டேன் என்றும், அவர் உள்ளே படுத்திருப்பதாக சொல்லிவிட்டு என்னிடம் ரூ.100/– ஐ கொடுத்து அனுப்பினார் என்றும், பின்பு நான் செங்கல் சூளை ஓனர் சண்முகத்திற்கு போன் செய்து பேசினேன் என்றும், அவர் என்னிடம் சூளையை ஆத்து தண்ணீர் ஏறியிருக்கிறதா என்று பார்த்து விட்டு வரச்சொன்னார் என்றும், மீண்டும் நான் இரவு 11.00 மணிக்கு செங்கல் சூளை கொட்டகைக்கு சென்றேன் என்றும், அங்கு ரேகா மட்டும் இருந்தார் என்றும், அவர் என்னிடம் பிரபு என்னிடம் சண்டை போட்டு விட்டு, மகள்களை அழைத்துக் கொண்டு சமயபுரம் டோல்கேட் சென்றுவிட்டார் என்றும், பின்பு செங்கல் சூளை ஓனர் சென்னதன் பேரில் நானும், ரேகாவும் சென்று, ரேகாவின் மகள்களை அழைத்து வந்தோம் என்றும், இரண்டு நாட்கள் கழித்து, ரேகா மகள்களுடன் வெள்ளுர் சூளைக்கு சென்று விட்டார் என்றும், பின்பு 03.09.2022 அன்று காலை 07.00 மணியளவில் பிரபுவும் ரேகாவும் தங்கியிருந்த சூளை கொட்டகைக்கு பின்புறம் இருந்த காவிரி ஆற்றில், ஒரு அடையாளம் தெரியாத ஆண் பிரேதம் மிதப்பதாக கேள்விபட்டு ரேகாவிடம் தகவல் சொன்னேன் என்றும், பின்பு ரேகாவிடம் சந்தேகப்பட்டு

மீண்டும் மீண்டும் கேட்ட போது, அவர் 27.08.2022 அன்று இரவு 09.00 மணியளவில் தனது மகள் ரேவதியிடம் பிரபு தவறாக நடக்க முயற்சி செய்ததால் பிரபுவை அரிவாளாலும், வாதாமடக்கை கட்டையாலும் தாக்கி கொன்று காவிரி ஆற்றில் விட்டதாக சொல்லி யாரிடமும் சொல்லாதே என்று சொன்னார் என்றும், பின்பு இது குறித்து போலீசார் ரேகாவை கைது செய்தார்கள் என்றும், கடந்த 13.01.2023 அன்று முசிறி நீதிமன்றத்திலிருந்த வந்த சம்மனை பெற்று, முசிறி நீதிமன்றம் சென்று நீதிபதி முன்பு மேற்படி சம்பவத்தை பொறுத்து வாக்குமூலம் சொன்னேன் என்றால் சரியல்ல. எதிரி என்னுடன் வேலை பார்த்தவர் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

முசிறி குற்றவியல் நீதிமன்றத்திற்கு போலீசார் தான் அழைத்துச் சென்றார்கள். அங்கு அவர்கள் சொல்லி கொடுத்ததை தான் சொன்னேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை - இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.